17th December 1959] [Mr. Speaker]

procedure in such cases would be that the courts should apply to the House for permission to enable the Member to appear as witness.

In the present case is it the pleasure of the House to give leave to the hon. Member?

HON. MEMBERS : No, No.

MR. SPEAKER : I take it that the noes are in the majority and therefore the hon. Member can claim privilege and remain in the House.

III—CALLING ATTENTION TO FAILURE OF GOVERNMENT TO TAKE ADEQUATE STEPS TO SUPPLY AMMONIUM SULPHATE AND INSECTICIDES TO AGRICULTURISTS IN SOUTH ARCOT DISTRICT.

MR. SPEAKER : The hon. Member Sri A. Govindasamy will caun the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, namely, the failure of Government to take adequate steps to supply Ammonium Sulphate and insecticides to the agriculturists in Souh Arcot District.

SRI A. GOVINDASAMY : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, நமது ராஜ்யத்தில் விவசாயத்தை நல்ல முறையில் நடத்தி உற்பத்தியை பெருக்குவதற்கு ரசாயன உரம் பயன்படுகிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அதன் காரணமாக விவசாயிகளுக்கு இது இன்றையதினம் மிகவும் தேவையாக இருக்கிறது. ஆனால் நம்முடைய ராஜ்யத்துக்கு போதுமான ரசாயன உரம் கிடைக்காததின் காரணத்தினால் உற்பத்தியை அதிகமாக பெருக்க முடியவில்லை என்று கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நாம் சுமார் 12 லட்சம் டன் உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டம் போட்டிருந்தும், அதில் மூன்று லட்சம் டன் துண்டு விழும்படியான நிலை வந்திருக்கிறது, அதற்கு காரணம் போதுமான அளவுக்கு ரசாயன உரம் இறக்குமதி செய்ய முடியாதது தான் என்ற நிலைமையை கவர்னர் அவர்கள் தங்கள் உரையில் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதை தெளிவாக புரிந்து கொள்ளுகின்ற நிலையில் இன்றைக்கு கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர் அவர்களும் சென்ற ஆண்டு நாம் ஒரு லட்சம் ஐம்பதினாயிரம் டன் ரசாயன உரம் கேட்டிருந்தோம். இந்த ஆண்டு ஒரு லட்சத்தி அறுபதினாயிரம் டன் கேட்டிருக்கிறோம் என்றும், சென்ற ஆண்டு ஒரு லட்சத்தி ஐம்பதினாயிரம் டன் கேட்டதற்கு சுமார் 82 ஆயிரம் டன் தான் வழங்கப்பட்டிருக்கிறது. அதே போன்று தான் இந்த ஆண்டு ஒரு லட்சத்தி அறுபதினாயிரம் டன் கேட்டதற்கு சென்ற அக்டோபர் மாதம் 15-ம் தேதி வரையிலும் 30,872 டன்தான் மத்திய அரசாங்கத்தால் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நாம் கோருகிற அளவுக்கு மத்தியு அரசாங்கத்தால் கொடுக்கமுடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. நாம் கோருகிற அளவு முழுவதையும் அளிப்பதற்கு மத்திய அரசாங்

கத்தை நம் அரசாங்கம் வற்புறுத்தாமல் இருக்கிறது என்கின்ற குற்றச்சாட்டை நான் சொல்லுகிறேன். நமக்கு வேண்டிய ரசாயன உரம் பூராவையும் இறக்குமதி செய்வதற்கு நமது அரசாங்கம் வழி செய்யவேண்டும். குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ரசாயன உரத்திற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

(Deputy Speaker in the Chair.)

அதிலும் குறிப்பாக ஏழை விவசாயிகள் ரசாயன உரம் கிடைக்காமல் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இப்போது ரசாயன உரம் வழங்குவதற்கு சமுதாய நலத்திட்டங்கள் அமுலாகியிருக்கிற இடங்களில் அந்தப் பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளிடத்திலும், அது இல்லாத இடங்களில் தாசில்தாரிடத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சில பண வசதி படைத்தவர்கள், அவர்கள் நான்-பிளாக் ஏரியாவில் இருந்தாலும்கூட, பிளாக் அதிகாரிகளிடத்தில் போய் தொந்தரவு பண்ணி வாங்கிக்கொள்கிறார்கள். அதே போன்று பிளாக் ஏரியாவில் இருக்கின்ற பண வசதி படைத்தவர்களும் தாசில்தார்களிடத்தில் போய் வாங்கிக்கொள்கிறார்கள். இவ்விதம் இரண்டு முறையிலும் அவர்கள் இந்த ரசாயன உரத்தை பெறுகின்ற நிலைமை ஏற்படுகிறது. பொதுவாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் வினியோகம் செய்யவேண்டும் என்று சொன்னாலும், அப்போது பொதுவாக இந்த கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு சலுகை காட்டக்கூடிய நிலைமையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலைமையை தவிர்க்க அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். விழுப்புரத்தில் சமீபத்தில் நடந்த விவசாயிகள் மகாநாட்டில்—உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக நடந்த மகாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் அவர்களிடத்தில் அங்குள்ள விவசாயிகள் தங்களுக்கு போதுமான அளவு ரசாயன உரம் கிடைக்கவில்லை என்ற குறையை தெரிவித்தார்கள். அவற்றை உடனடியாக கவனிக்கலாம் என்று அமைச்சர் அவர்களும் உத்திரவாதம் அளித்தார்கள். அதன்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும் புதுவை ராஜ்யத்திலிருந்து—புதுவை ராஜ்யம் சமீபத்தில்தான் இந்திய யூனியனோடு சேர்ந்திருக்கிற காரணத்தால்—விழுப்புரம், கடலூர், திண்டிவனம் போன்ற தாலூகாக்களுக்கு கள்ளமார்க்கட்டில் ரசாயன உரம் வந்து கொண்டிருக்கிறது. கண்ட்ரோல் ரேட் 19 ரூபாய் என்று சொன்னால் கள்ளமார்க்கட்டில் 25 ரூபாய் கொடுத்தால் எவ்வளவு வேண்டுமானாலும் சுலபமாக வாங்கலாம் என்கின்ற நிலைமை அங்கு இருந்து கொண்டிருக்கிறது. நான் இதைப்பற்றி அங்கு கண்டித்து சொன்ன நேரத்தில் அங்குள்ள ஒரு பெரிய

விவசாயி இதைப்பற்றி கண்டித்துச் சொல்லாதீர்கள், அவ்விதம் நீங்கள் கண்டித்து பேசுவதாக இருந்தால் இப்போது கள்ள மார்க்கட்டில் கிடைத்துக் கொண்டிருப்பதும் கிடைக்காமல் போய் விடும் என்று தெரிவித்தார். (குறுக்கீடு.) கனம் அமைச்சர் அவர்களும் இந்த வாதத்தை ஒத்துக்கொள்வதாக தெரிகிறது. அமைச்சர் அவர்கள் இதை ஒத்துக்கொள்வதாக இருந்தால் நான் சொல்லுகிற குற்றச்சாட்டு இதில் நிச்சயமாக தொக்கி நிற்பதாக ஆகும். எப்படி அவர்கள் உரத்தை வேண்டிய அளவுக்கு பெற்றுக்கொள்ள முடிகிறது என்றால் அவர்களுக்கு இருக்கிற பணபலத்தினாலும், அவர்களுக்கு இருக்கின்ற அரசியல் செல்வாக்கினாலும், பொருளாதார துறையில் இருக்கின்ற செல்வாக்கினாலும், அவர்கள் அதிகமாக வாங்கி பதுக்கி வைத்துக்கொள்வார்கள். இவ்விதம் அதிகமாக குறைந்த விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு, ஏழை விவசாயிகளுக்கு அதிக விலையில் கொடுத்து வருகின்ற நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. இவ்விதம் நடந்து கொண்டிருக்கின்ற நிலைமை நீடிக்கவேண்டும் என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் இதற்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்றுதான் கருதுகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். நாம் எப்படி ஏழை விவசாயிகளிடத்தில் போய் நெல் கொள்முதல் செய்கின்றோமோ, அதேபோன்று ஒவ்வொரு விவசாயிக்கும் தேவையான அளவு ரசாயன உரம் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே பூச்சி மருந்து அரை விலைக்கு கொடுக்கப்படும் என்று பிரசாரம் செய்கிறோம். ஆனால் விவசாயிகளுக்கு பூச்சி மருந்து சரியான முறையில் கிடைக்காத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கவனித்து, விவசாயிகளுக்கு வேண்டிய ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், இவைகள் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் படும் கஷ்டங்களை உணர்ந்து—அவர்களுக்கு கண்ட்ரோல் ரேட்டிற்கு கிடைக்கும்படியாக செய்வதற்கு—வேண்டிய வழிவகை செய்யவேண்டும் என்று கூறி, இந்த விஷயங்களை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Deputy Speaker, Sir, this is a matter given notice of under Rule 41 of the Assembly Rules but the hon. Member spoke as if he was moving an Adjournment Motion. (Interruption) I did not raise objection then because I did not want to stand in his way. Therefore, I should not be expected to refer to every point that he has made.

Now I would like to make a statement about the supply position of ammonium sulphate and pesticides in the South Arcot district.

The allotments of nitrogenous fertilisers are made by the Government of India under the Central Pool arrangements. As the indigenous production of fertilizers in this country is inadequate

to meet the demand, imports are being made by the Government of India. But, in view of the present difficult foreign exchange position the centre is not able to meet the full requirements of this State. The Government of India were able to supply to this State up to 15th October 1959 only 19 per cent of our requirements of ammonium sulphate, for the curent yaar 1959–60. In respect of other fertilizers, the percentages of actual supply was 41 per cent for urea, 14 per cent for ammonium sulphate nitrate and 25 per cent for calcium ammonium nitrate. As the supply position of fertilizers was not satisfactory, I recently took up the matter with the Union Minister for Food personally and as a result, the Government of India have since allotted a further quantity of 4,000 tons of ammonium sulphate from Sindhri, for which despatch instructions have been issued telegraphically and the Chief Director of Movements has also been asked by telegram to move the quantity to the destination stations on highest priority basis.

Out of the quantity made available to this State, roughly 25 per cent is set apart for distribution to the manure mixing firms for use in the preparation of manure mixtures and the balance is being distributed to each district on a rational basis according to its needs. The stock and supply position as indicated by the fortnightly returns received from the district stockholders is reviewed and issue of despatch instructions to the district is so arranged as to ensure adequate supplies to the needy areas and to maintain a reserve stock of three months' requirements at any time at all centres of distribution, as far as possible, consistent with the supply. with a view to meet adequately and in time the demands of the ryots for the fertilizers.

The shortage of fertilizers is being experienced throughout the State and it is not peculiar to the district of South Arcot alone. The quantity allotted to South Arcot district up to December 1959, during the current year is, ammonium sulphate 5,500 tons, Urea 1,325 tons, ammonium sulphate nitrate 100 tons and calcium ammonium nitrate 60 tons. Further, out of the special allotment of 4,000 tons of ammonium sulphate made from Sindri for this quarter a quantity of 400 tons has been allotted to South Arcot district. This special quota has been given only to five districts and South Arcot is one of them. It is therefore clear that South Arcot district has neither been neglected nor given an unfair treatment in the matter of allotment of fertilizers. With the poor allocations made to this State, every effort is being made to see that the minimum needs of all districts are met proportionately without any discrimination whatsoever consistent with the acreage, demand from the ryots for chemical fertilizers and stock position.

As regards insecticides, they are being supplied at concessional rates to food crops throughout the year. Recently, the Director of Agriculture has issued instructions to all District Agricultural

Officers to stock pesticides and fungicides in adequate quantities to meet the demand of this Rabi season. I assure the House that if any specific complaints regarding distribution of insecticides are brought to the notice of the Government, they will be immediately looked into for prompt action.

IV. PRESENTATION OF REPORTS.

(1) THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI K. SATTANATHA KARAYALAR : Mr. Deputy Speaker, Sir, I, Chairman of the Committee on Government Assurances, present the Sixth Report of the Committee on Government Assurances.

(2) THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI T. SAMPATH : Mr. Deputy Speaker, Sir, I, Chairman of the Committee on Subordinate Legislation, present the Sixth Report of the Committee on Subordinate Legislation.

V. GOVERNMENT BILLS.

(1) THE MADRAS (TRANSFERRED TERRITORY) INCORPORATED AND UNINCORPORATED DEVASWOMS BILL, 1959 (L.A. BILL NO. 25 OF 1959).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I move—

¶ "That the Madras (Transferred Territory) Incorporated and Unincorported Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959) be taken into consideration."

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டைத் தாலூக்காவும் சென்ற 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டது. மாற்றப்படுவதற்கு முன்பு அந்தப் பிராந்தியத்திலுள்ள அறநிலையங்களையெல்லாம் முன்பு இருந்த தேவஸ்வம் போர்டு நிர்வகித்து வந்தது. அங்கு இருந்த தேவஸ்வம் போர்டானது 1950-ம் ஆண்டில் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இயற்றப்பட்ட திருவாங்கூர்-கொச்சி அற நிலயப் பாதுகாப்புப் சட்டப்படி அமைந்தது. 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி அந்தப் பிராந்தியங்கள் இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டவுடன், ஸ்டேட்ஸ் ரீ-ஆர்கனைஸேஷன் சட்டத்திலே—1956-வது வருஷத்திய சட்டத்திலே—122-வது பிரிவுப்படி இந்தப் பிராந்தியங்களுக்கு தேவஸ்வம் போர்டு இல்லை. இந்த ராஜ்யத்திலிருக்கிற அற நிலையப் பாதுகாப்பு போர்டு கமிஷனர் அவர்கள் தேவஸ்வம் போர்டு அதிகாரங்களைப் பெற்று, கமிஷனரே நிர்வகிப்பது என்று 122-வது பிரிவிலே இருக்கிறது. அது முதற்கொண்டு அற நிலயப் பாதுகாப்புக் கமிஷனர் அதிகாரங்களைச் செலுத்திக் கொண்டு வருகிறார். அந்த திருவாங்கூர்-கொச்சி சட்டம் ஓரளவுக்கு மாற்றப்பட்டது. அந்தப் பிராந்தியங்கள் இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்பு இருந்த சட்டம் ஓரளவுக்கு